[1st March 1958

Mr. SPEAKER : கனம் மந்திரி மாணிக்கவேலு அவர்களால் பதில் அளிக்கப்படவேண்டிய கேள்விகளை இன்று மந்திரி அவர்கள் வராததினால் பின்னால் எடுத்துக்கொள்ளலாம். The Hon. Sri Venkataraman will be coming. We will pass over Q. No. 155 now and take it up a little later.

New bus routes

* 156 *Q.*—Sri P. G. MANICKAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state the number of applications received and the number sanctioned for the opening of new bus routes in the Coimbatore district during 1956–57 and 1957–58?

The Hon. Sri V. RAMIAH : The figures are as follows :—

1956–57.

Number of applications received	24
Number of routes sanctioned	4

1957–58 up to 15th January 1958.

Number of applications received	22
Number of routes sanctioned	7

Sri P. G. MANICKAM : சபாநாயகர் அவர்களே, சென்னை மாகாணத்தில் புது பஸ் மார்க்கங்கள் ஆரம்பிப்பதற்கு ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையில் கோயம்புத்தூர் ஜில்லாவுக்கு எத்தனை எண்ணிக்கை ஒதுக்கப்பட்டிருக்கிறது ? அதில் எத்தனை ரூட்டுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது ?

The Hon. Sri V. RAMIAH : ஒவ்வொரு ஜில்லாவிற்கும் எத்தனை ரூட்டுகள் தேவை என்று பார்த்து அதற்கு தகுந்தாற் போல் முடிவு செய்து ரூட்டுகள் கொடுக்கப்பட்டுவருகிறது.

Sri K. VINAYAKAM : Sir, out of the lucky recipients of these Bus Routes, are they new entrants or are they lorry owners to begin with or are they fleet owners?

The Hon. Sri V. RAMIAH : How does this question relate to the main question, Sir? (Interruption). It is totally a wrong question.

Mr. SPEAKER : The Hon. Minister may refuse to answer the question.

Sri P. G. MANICKAM : சபாநாயகர் அவர்களே, புது பஸ் மார்க்கங்கள் கொடுக்கப்படும் பொழுது முக்கியமாக கிராமப்பகுதிகளுக்கு கொடுக்கப்பட்டு வருகின்றனவா ? அப்படியானால் எத்தனை இடங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

The Hon. Sri V. RAMIAH : புது ரூட்டுகள் எந்தெந்த கிராமங்களுக்கெல்லாம் தொடர்பு இருக்கிறதோ அந்த இடங்களுக்கு அதிக வசதி செய்து கொடுக்கவேண்டும் என்றுள்ள நோக்கத்தை மனதில் வைத்துத் தான் கொடுக்கப்பட்டு வருகிறது.

Sri T. T. DANIEL : May I know, Sir, whether the Government have formulated any principles which they have to follow in opening new bus routes?

The Hon. Sri V. RAMIAH : The general principle is wherever there is demand, the demand is considered.